# 12 கலந்துரையாடல்களில் மற்றவர்களின் பங்களிப்புடன் இணைதல்

**இலக்கு**

*இப் பயிற்சி இரு இன்றியமையாத தொடர்பாடல் திறன்களைப் பழக்குகிறது. 1.கூர்மையாகக் கேட்டல், 2. ஒரு கலந்துரையாடலின் உட்கருத்தினைக் கண்காணிக்கும் திறமை.*

தரம் 3 - 9

30 மணித்துளிகள்



**கருவிகள்:**
பெரிய தாள் துண்டுகள் அல்லது ஒரு காட்சி அட்டை வாக்கியக் கட்டடத் தொகுதிகளுக்கு.

**குறிப்பு:**

- இப் பயிற்சி #9இல் குறிப்பிடப்பெற்ற இன்றியமையாத உரையாடல் விதியுடன் தொடர்புடையது ("முதலில் பேசியவர் கூறியதை எடுத்துக்காட்டல்"). இது மாணவர்களுக்கு வாக்கிய உறுப்புகளின் பக்கத்துணையோடு இவ்விதியைக் கையாள துணைசெய்கிறது. இவ்வாறான வாக்கியத் தொகுதிகளுடன் செயலாற்ற, அறிமுக பகுதியின் "பேச்சின் விரிவாக்க வழிகள்" இயல் 2 இ ஐப் பார்க்கவும்.

---

**நடைமுறை:**

- சிறந்த ஒன்றோடொன்று தொடர்புடைய உரையாடலை அடைவதற்கு எடுத்துக்காட்டாக உரையாடலுக்கு முன்னர் பேசிய பேச்சாளரின் பங்களிப்புகளுடன் தொடர்புகொள்வதன் மூலம் பங்கெடுப்போர் தம்மிடையே தொடர்பேற்படுத்த வேண்டும் என்பதனை ஆசிரியர் விளக்குகிறார். மாணவர்களும் ஆசிரியரும் சேர்ந்து பேச்சு வழிமுறைகள் அல்லது வாக்கிய உறுப்புக்கள் பற்றிக் கலந்துரையாடி, அவற்றை தாள் துண்டுகளில் அல்லது ஒரு காட்சி அட்டையில் எழுதுவார்கள்.
- அதனைத் தேர்வுசெய்து பார்க்க ஆசிரியர் ஒரு கூற்றை முன்வைத்து பட்டியலிடப்பட்ட வாக்கியத் தொடக்கங்களுடன் தொடர்புபடுத்திப் பேசும்படி மாணவர்களை வேண்டுகிறார் (எ.கா. "வகுப்பில் கைப்பேசிகளைப் பயன்படுத்துதலுக்கு ஒப்புதல் வழங்காமை பயனுள்ளது என நான் கருதுகிறேன்.") வேறு கூற்றுக்களைக் கொடுத்து மாணவர்கள் விளங்கிக்கொள்ளும்வரை, இந்த பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்யவேண்டும்.
- அடுத்த 2-3 குழு அல்லது வகுப்புக் கலந்துரையாடல்களில், மாணவர்கள் முன்னர் பேசியவரின் கருத்தோடு ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட அல்லது மாணவர் தம்முடைய வாக்கியங்களுடன் தொடர்புகொள்ளுதலின் இன்றியமையாமை பற்றி மிகுந்த அக்கறையுடன் கண்காணிப்புச் செலுத்துவர். உரையாடல் முடிந்த பின், மாணவர்கள் இந்த வாக்கிய தொகுதிகளைப் பற்றிய அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களைப் பகிர வேண்டும்: எந்த வாக்கிய தொகுதிகள் மிகவும் பயனுள்ளனவாக அமைகின்றன? நாம் பயன்படுத்தக்கூடிய வேறு ஏதாவது வாக்கியத் தொகுதிகள் இருக்கின்றனவா?

---

## மேற்கோளுக்கும் தொடுப்பதற்குமான வாக்கியத்தொகுதிகளுக்கு எடுத்துக்காட்டுகள்:

- நான் தமிழவனிடம் மேலும் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்:...
- இது தொடர்பாக, நான் பின்வருவனவற்றைச் சொல்ல விரும்புகிறேன்:...
- குயிலி…என்று கூறினாள் / சொன்னாள், ஆனால்,…
- நான் அறிவன் கூறியதை ஏற்றுக்கொள்கிறேன், நானும்…என்று எண்ணுகிறேன்.
- தமிழி கூறியதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன், ஏனென்றால்,…
- தமிழி கூறியதோடு, நான் … என்பதை சேர்க்க விரும்புகிறேன்.
- நீ கூறியதை நான் சரியாக விளங்கிக்கொண்டேனெனில்…
- … என்று கூறி நான் முடிக்கின்றேன்.
- நான் பெற்ற பட்டறிவு என்னவெனில்…
- இது நல்லது / நல்லதல்ல என்பதால்… / …என்பது எனக்கு பிடித்திருக்கின்றது / பிடிக்கவில்லை.